بسم الله الر حمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 2:4, முஹர்ரம், 1427, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, E-Mail : suvanam@gmail.com

## மடமையைத் தகர்ப்போம்

*- மௌலவி.K.L.M.இப்ராஹீம் மதனி. M.A*

உலகம் படைக்கப்பட்ட நாட்களிலிருந்து அல்லாஹுத்தஆலா ஒரு வருடத்தை பன்னிரெண்டு மாதங்களாகத்தான் படைத்திருக்கின்றான். அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

**நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவுப்) புத்தகத்தில் வானங்களையும், பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும் - அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவை இது தான் நேரான மார்க்கமாகும் - ஆகவே அம்மாதங்களில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள் இணை வைப்பவர்கள் உங்கள் அனைவருடனும் போர் புரிவது போல் புரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோருடனேயே இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (அல்-குர்ஆன் 9:36).**

பன்னிரெண்டு மாதங்களில் எந்த மாதத்தையும் துக்கம் அனுஷ்டிக்கும் மாதமாக இஸ்லாம் பிரகடனப்படுத்தவில்லை. மாறாக எல்லா மாதங்களையும் அல்லாஹ் ஒரே அமைப்பில்தான் படைத்திருக்கின்றான். அதில் சில மாதங்களுக்கு மற்ற சில மாதங்களை விட சிறப்புக்களை அல்லாஹ் வழங்கியிருக்கின்றான். உதாரணமாக ரமலான் மாதம், துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்கள், இவை மற்ற மாதங்களை விட சிறப்பிற்குரியது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அல்லாஹ் படைத்த ஒவ்வொரு நாளிலும் மனிதனுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய காரியங்களும், கவலை ஏற்படுத்தக்கூடிய காரியங்களும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதுதான் அல்லாஹ்வின் நியதியாகும். அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

**நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம் ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!** *(அல்-குர்ஆன் 2:155)*

அல்லாஹ் தன் அடியார்களை பல விதத்திலும் சோதித்துக் கொண்டே இருப்பான், அதற்காக பொறுமையை மேற்கொள்வதுதான் ஒவ்வொரு மு∴மினின் கடமையாகும். இதற்கு மாறாக தனக்கு ஏற்பட்ட துக்ககரமான செயலுக்காக ஒவ்வொரு வருடமும் துக்கம் அனுஷ்டிப்பது மடமைக் காலத்தின் செய(லும், இஸ்லாத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒன்றுமாகும். இந்த வகையைச் சேர்ந்ததுதான் முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாளை துக்கம் அனுஷ்டிக்கும் நாளாக எடுத்துக் கொள்வது. நபி(ஸல்) அவர்களின் பேரர் ஹுஸைன்(ரலி) அவர்கள் இந்த நாளில்தான் கர்பலாவில் கொல்லப்பட்டார்கள், அந்த நிகழ்ச்சியை ஞாபகம் ஊட்டும் முகமாகவே இதை நாங்கள் செய்கின்றோம் என்கிறார்கள் இந்நிகழ்ச்சியை செய்பவர்கள். ஹுஸைன்(ரலி) அவர்கள் கொல்லப்பட்டது கவலைக்குரிய செய்தி என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை, அந்த நாளை துக்கம் அனுஷ்டிக்கும் நாளாக எடுத்துக் கொள்வதற்கு இஸ்லாத்தில் எந்தவித ஆதாரமும் இல்லை.

நல்லவர்கள் ஷஹீதாக்கப்பட்ட நாட்களை துக்கம் அனுஷ்டிக்கும் நாட்களாக எடுத்துக் கொள்ளவேண்டும்

*- தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க...*

## உள்ளே

வெற்றி யாருக்கு?- 3
மினா சம்பவத்திற்கு யார் பொறுப்பாளி? -5
இந்தியா சில ஒளிரும் தகவல்கள்- 7
தேனீக்கள் (அறிவியல் தொடர்)- 10
குறுக்கெழுத்துப் போட்டி- 12

## இறையருட் செல்வங்கள்

***(கதீஜா மணாளன்)***

இறைவன் நமக்கு அளித்த செல்வங்களில் மிகச் சிறந்த செல்வம் “குழந்தைகள்” என்று சொன்னால் அது மிகையன்று. திருமணம் ஆனதும் அடுத்ததாக புதுமணத் தம்பதிகளின் எதிர்ப்பார்ப்பு குழந்தைக்குத்தான். சிறிது காலதாமதம் ஆகிவிட்டால் கணவனும், மனைவியும் சோகத்தில் ஆழ்ந்து விடுவதையும், மாமியார் மற்றும் நாத்தனார் வட்டங்களின் குத்தல் பேச்சுக்களும், அண்டை வீட்டாரின் அறிவுரைகளும் சூழ்ந்துகொள்கின்றன. குழந்தைச் செல்வங்கள் எவ்வளவு மதிப்புமிக்கவர்கள் என்பதை அடுக்கடுக்காய் குழந்தைகளைப் பெற்றெடுத்து அலுத்துப் போனவர்களைவிட குழந்தைப் பேற்றிற்காக ஏங்கித் தவிப்பவர்கள்தான் நன்கு அறிவர். ஆண்குழந்தை வேண்டும் என்ற ஆசையில் வரிசையாக பெண்குழந்தைகளை பெற்று ஓய்ந்து போனவர்களும் உண்டு. இந்த முறையாவது பெண்குழந்தை பிறக்கட்டும் என்று ஏங்குபவர்களும் உண்டு.

ஆண்டுகள் பல ஆகியும் தனக்கென ஒரு வாரிசு கிடைக்காமல் ஏக்கங்களை சுமந்து நிற்கும் தம்பதிகளும் உண்டு. இது வல்லமை மிக்க இறைவனின் படைப்பாற்றல் ஆகும். அல்லாஹ் தன் அருள்மறையில் :

**வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவன் நாடியவற்றை அவன் படைக்கின்றான். அவன் நாடியவர்களுக்கு பெண்மக்களை அன்பளிப்புச் செய்கின்றான். தான் நாடியவர்களுக்கு ஆண்மக்களை அன்பளிப்புச் செய்கின்றான். அல்லது ஆண்மக்களையும், பெண்மக்களையும் கலந்தே கொடுக்கின்றான்.**

**அன்றியும் அவன் நாடியவர்களை மலடாகவும் ஆக்கிவிடுகின்றான். நிச்சயமாக அவன் நன்கு அறிந்தவன். மிக்க ஆற்றல் உடையவன்.**

***(அல்-குர்ஆன் 42 : 49,50)***

மேலும் இவை நம் போன்ற சராசரி மக்களை மட்டுமல்லாது நபிமார்களது வாழ்விலும் அவர்கள் குழந்தைப் பேறுக்காக ஏங்கியமையை திருக்குர்ஆன் நமக்கு எடுத்தியம்புகிறது.

***என்னுடைய இரட்சகனே! நிச்சயமாக எனது எலும்புகள் பலவீனமடைந்துவிட்டன. என் தலையும் நரை முடியால் இலங்குகிறது. என் இரட்சகனே! நான் உன்னிடத்தில் பிரார்த்தனை செய்து (கேட்டதில்) பாக்கியமில்லாதவனாக ஆக்கிவிடாதே! நிச்சயமாக நான் எனக்குப்பின் என் உறவினர்களை பயப்படுகின்றேன். என் மனைவியோ மலடாக ஆகிவிட்டாள்! ஆகவே உன் புறத்திலிருந்து ஒரு வாரிசை எனக்களிப்பாயாக!***

***(அல்-குர்ஆன் 20 : 4,5)***

என்று ஜக்கரிய்யா(அலை) அவர்கள் பிரார்த்தித்ததையும், இறைவன் அவருக்கு "யஹ்யா" என்ற மகனை அளித்ததையும் குர்ஆனில் காணமுடிகிறது. இன்னும் நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் அல்லாஹ்வின் தோழராக இருந்தும் அவர்களுக்கு வயோதிக பருவத்திலேயே குழந்தைப் பேறு கிடைத்தது.



***(என்னுடைய) வயோதிக காலத்தில் இஸ்மாயீலையும், இஸ்ஹாக்கையும் எனக்கு அன்பளிப்பாக வழங்கினானே அந்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். (அல்-குர்ஆன் 14:39)***

மேற்கண்ட வசனங்கள் நமக்கு சுட்டிக்காட்டுவதெல்லாம் குழந்தைப் பேறு என்பது இறைவன் தான் நாடியவர்களுக்கு வழங்கும் அன்பளிப்புதான். அதைத் தான் நாடியவர்களுக்கு மட்டுமே வழங்குவான்.

இன்னும் வாரிசுக்காக ஏங்குபவர் எவ்வளவு பெரிய பக்திமானாக நல்ல பண்புகளுக்கு சொந்தக்காரராக, ஏன் நபியாக இருந்தாலும் இறைவன் நாடினால் மட்டுமே வாரிசுகள் உருவாகும்.

இதைப் புரிந்து கொள்ளாத நம் மக்களில் பலர், திருமணமான சில மாதங்களிலேயே குழந்தை இல்லையே என்ற ஏக்கம் மேலிட்டு படைப்பாளனான வல்ல அல்லாஹுவை விடுத்து அவுலியாக்களிடம் படையெடுத்து மருத்துவத்தைப் புறக்கணித்து தர்ஹாக்களில் மண்டியிட்டு மன்னிக்க இயலாத பெரும் பாவங்களில் வீழ்ந்துவிடுகின்றனர்.


**உங்கள் எழுத்தாற்றலை உலகிற்குப் பறைசாற்றத் தயாராகிவிட்டீர்களா?**

***"சுவனப்பாதை" நடத்தும் மாபெரும் எழுத்துலகப் புரட்சிப் போட்டி விபரங்கள் எதிர்வரும் இதழில் எதிர்பாருங்கள்.***


சிலருக்கு இறைவனின் கருணையால் குழந்தைப் பேறும் கிடைத்துவிடுகின்றது. ஆனால் கிடைத்த குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்குகிறார்களா?

குழந்தை வளர்ப்பு என்பது அந்தக் குழந்தையை பாலூட்டி, சீராட்டி, நடை பயிலும் காலம்வரை கண்காணிப்பது மட்டுமல்ல. உண்மையிலேயே பால்குடிப் பருவம் முதல் நடை பயின்று பள்ளிப் பருவம் வரை அன்போடு வளர்ந்த எத்தனையோ குழந்தைகள் பெரியோர்கள் ஆனதும் ஒழுங்கீனத்தில் ஊற்றுக்கண்களாக நடப்பு சமுதாயத்தில் கெட்ட முன்மாதிரியாக உருவெடுப்பதைக் காணமுடிகின்றது. இன்னும் சிலர், பெற்றோர்களோ பெருமிதம் கொள்ளும் அளவிற்கு நன்நடைத்தைகளும், தொழுகை போன்ற வணக்கங்களிலும் சிறந்து விளங்குவதைப் பார்க்கின்றோம்.

குழந்தைகள் நன்மக்களாவதும், கெட்டவர்களாக உருவெடுப்பதும் ஏன் என்று நம் உள்நெஞ்சம் கேட்கும் கேள்விற்கு பதில்தான் என்ன? மரபியல் பிரச்சினையா? மோசமான குடும்பச் சூழலா? டி.வி, கேபில் போன்ற நச்சு ஊடகங்களா? பளுவான பாடதிட்டங்களும், தரம் குறைந்த கல்விச் சூழலுமா? நண்பர்கள் வட்டம் சரியில்லையா? நாகரீகம்(?) ஓங்கிய நகர வாழ்க்கைத் தரம் காரணமா? என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே செல்லலாம்

ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடையைச் சொல்வார்கள் ஆனால் அடிப்படைக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால் ஒரு உண்மை புலப்படுகிறது. ஒரு பள்ளிக்கூடம் தரமான கல்வியைத் தரலாம், ஒரு மருத்துவரை அல்லது பொறியியல் வல்லுனரைத் தரலாம், ஆனால் அவர் இறைவனுக்குப் பயந்து இறையச்சம் மிகுந்த மனிதநேயம் பொருந்திய சமூகப் பணியாளராக பெற்றோர்களை பேணுபவராக சமுதாயத் காவலராக, பிறர்நலம் நாடுபவராக, வரவேண்டுமென்றால் அதற்கு முதற்காரணம் பெற்றோர்கள்தான். அவர்களின் வளர்ப்பு முறையில்தான் அந்தக் குழந்தை, அந்த மாணவன், அந்த இளைஞன் புடம்போட்டு வார்க்கப்படுகின்றான்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு விலங்கு எப்படி முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுக்கிறதோ அதைப்போன்று, எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான (மார்க்கத்)திலேயே பிறக்கின்றன. விலங்குகள் அங்கக் குறைவுடன் பிறப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? (முழுமையான விலங்கை அங்க சேதப்படுத்துவது போல்) பெற்றோர்கள் தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தைவிட்டுத் திருப்பி) யூதர்களாகவோ, கிறித்தவர்களாகவோ, நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்.

*(அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா(ரலி), ஆதாரம்: புகாரி)*

**எனவே குழந்தை வளர்ப்பு என்பது மிகவும் இன்றியமையாதது. எனவே குழந்தையை வளர்ப்பதில் மார்க்கம் கூறும் நல்லுபதேசங்கள், தெளிவான வழிமுறைகள், வரையரைகளைப் பற்றித் தொடராகத் தெரிந்து கொள்வோம்.**

***-தொடரும் (இன்ஷா அல்லாஹ்)***

# வெற்றி யாருக்கு? (தொடர்-4)

***(நெல்லை இப்னு கலாம் ரசூல்)***

தன்னடக்கம் என்பது இஸ்லாத்தின் பார்வையில் ஒரு மகத்தான விஷயம். உத்தம திரு நபி(ஸல்) அவர்களால் சுவனத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நபித்தோழர்களில் ஒருவரான இரண்டாம் கலீ..பா உமர்(ரலி) அவர்கள் தன்னடக்கத்துடன் திகழ்ந்ததின் சான்றைப் பாருங்கள். அம்ர் இப்னு மைமூன்(ரஹ்) அறிவித்தார்கள், உமர் இப்னு கத்தாப்(ரலி) கொலை செய்யப்படுவதற்குச் சில நாட்களுக்கு முன் மதீனாவில் அவர்களை பார்த்தேன். அவர்கள் ஹுதை..பா இப்னு யமான்(ரலி) அவர்களுக்கும், உஸ்மான் இப்னு ஹுனை..ப்(ரலி) அவர்களுக்கும் அருகில் நின்று கொண்டு (அவர்கள் இருவரையும் நோக்கி, சவாதுல் இராக் விஷயத்தில்) நீங்கள் எப்படிச் செயல்பட்டீர்கள்? அந்த நிலத்திற்கு (மக்களால்) சுமக்க முடியாத வரிச்சுமையை சுமத்திவிட்டதாக நீங்கள் அஞ்சுகிறீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் இருவரும், அந்த நிலத்திற்கு அதன் (உரிமையாளர்களின்) சக்திக்கேற்பவே (வரி) விதித்தோம். அதில் மிக அதிகமாக ஒன்றுமில்லை என்றனர். அதற்கு உமர்(ரலி), அந்த நிலத்திற்கு (மக்களால்) சுமக்க முடியாத வரிச்சுமையை சுமத்தி விட்டீர்களா? என்று (நன்கு) யோசித்துப் பாருங்கள் என்றார்கள். அந்த இருவரும் இல்லை (அதன் சக்திக்கேற்பவே வரி சுமத்தினோம்) என்று பதிலளித்தனர். அப்போது உமர்(ரலி), அல்லாஹ் என்னை உயிரோடு வைத்திருந்தால் இராக் வாசிகளின் விதவைப் பெண்களை எனக்குப் பிறகு வேறெவரிடமும் கையேந்தத் தேவையில்லாத நிலையில் தான் விட்டுச் செல்வேன் என்று கூறினார்கள். இப்படி அவர்கள் சொல்லி நான்கு நாட்கள் கூட சென்றிருக்காது அதற்குள் (பிச்சுவாக் கத்தியால்) உமர்(ரலி) குத்தப்பட்டுவிட்டார்கள்.

உமர்(ரலி) குத்தப்பட்ட நாளில் அதிகாலை(த் தொழுகைக்காக) நான் (தொழுகை அணியில்) நின்று கொண்டிருக்கிறேன், எனக்கும் உமர்(ரலி) அவர்களுக்கும் இடையில் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை. உமர்(ரலி) (மக்களுக்குத் தொழுகை நடத்துவதற்கு முன்) இரண்டு தொழுகை அணிகளுக்கு இடையில் சென்றால் (மக்களை நோக்கி), சீராக நில்லுங்கள் என்று கூறுபவர்களாக இருந்தார்கள். அணிகளுக்கிடையே சீர் குலைவு தென்படாத போதே முன் சென்று (தொழுகைக்காக) தக்பீர் (தஹ்ரீமா) கூறுவார்கள். சில சமயம் "யூசு..ப்" அத்தியாயம் அல்லது "நஹ்ல்" அத்தியாயம் அல்லது அது போன்ற (வேறோர் அத்தியாயத்)தை, மக்கள் தொழுகைக்காக வந்து சேரும் வரையில் முதல் ரக்அத்தில் ஓதுவார்கள்.

(சம்பவ தினத்தன்று) அப்போதுதான் தக்பீர் கூறியிருப்பார்கள். "என்னை நாய் கொன்றுவிட்டது, அல்லது தின்றுவிட்டது." என்று கூறினார்கள். (அப்போது "அபூ லு..லுஆ ..பைரோஸ்" என்பவன் பிச்சுவாக் கத்தியால் அவர்களைக் குத்தி விட்டிருந்தான்). உடனே, அந்த "இல்ஜ்" (அரபியில்லாத அந்நிய மொழி பேசும் இறைமறுப்பாளன்) தன்னுடைய பிச்சுவாக் கத்தியை எடுத்துக் கொண்டு தன்னுடைய வலப்பக்கம், இடப்பக்கம் நிற்கும் எவரையும் விடாமல் குத்திக் கொண்டே விரைந்தோடலானான். முடிவாக, பதின்மூன்று ஆண்களை அவன் குத்தி விட்டிருந்தான். அதில் ஏழுபேர் இறந்துவிட்டனர். இதைக் கண்ட (அங்கிருந்த) முஸ்லிம்களில் ஒருவர் தம் நீண்ட தொப்பியை (கழற்றி) அவன் மீது வீசி எறிந்தார். அந்த அந்நிய மொழிக்காரனான இறைமறுப்பாளன், தாம் பிடிபட்டு விடுவோம் என்று எண்ணி தன்னைத் தானே அறுத்து (த் தற்கொலை செய்து) கொண்டான்.

மேலும், (தொழுகை நடத்திக் கொண்டிருந்த) உமர்(ரலி), அப்துர் ரஹ்மான் இப்னு அவ்..ப்(ரலி) அவர்களின் கரத்தைப் பிடித்து (மக்களுக்குத் தொழுகை நடத்துவதற்காகத் தம்மிடத்தில்) முன்னிறுத்தினார்கள். நான் பார்த்த (இந்தச் சம்பவத்)தை உமர்(ரலி) அவர்களுக்கருகே இருந்தவர்களும் பார்த்தனர். ஆனால், பள்ளிவாசாலின் மூலைகளில் (தொழுது கொண்டு) இருந்தவர்களுக்கு இது தெரியவில்லை. ஆயினும், (தொழுகை நடத்திக் கொண்டிருந்த) உமர்(ரலி) அவர்களின் சப்தம் நின்றுவிட்டபோது அவர்கள் "சுப்ஹானல்லாஹ், சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன், அல்லாஹ் தூயவன்) என்று கூறிக் கொண்டிருந்தார்கள். அப்போது அப்துர் ரஹ்மான் இப்னு அவ்..ப்(ரலி) (சிறிய அத்தியாயங்களை ஓதி) சுருக்கமாகத் தொழுகை நடத்தினார்கள்.

மக்கள் (தொழுது முடித்து) திரும்பியபோது உமர்(ரலி), இப்னு அப்பாஸ் அவர்களே! என்னைக் கொன்றவன் யார் என்று பாருங்கள் என்று கூறினார்கள். அப்போது இப்னு அப்பாஸ்(ரலி) சிறிது நேரம் சுற்றிப் பார்த்துவிட்டு வந்து, "முகீராவின் அடிமை தான் (உங்களைக் குத்தியது)" என்று கூறினார்கள். உமர்(ரலி), அந்தத் திறமையான தொழில் கலைஞனா? என்று கேட்டார்கள். "ஆம்" என்று இப்னு அப்பாஸ்(ரலி) பதிலளித்தார்கள். அல்லாஹ் அவனைக் கொல்லட்டும்! அவன் விஷயத்தில் நல்லதைத் தானே நான் உத்தரவிட்டேன்! ஆனால், (என்னையே அவன் கொன்றுவிட்டானே)! தன்னை முஸ்லிம் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவரின் கரத்தால் எனக்கு மரணம் நேரும்படிச் செய்து விடாத அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

(மதீனா நகரத்தின் சில பணிகளுக்கு அரபுகள் அல்லாத அந்நியர்கள் அவசியம் எனக் கூறி) அரபுகள் அல்லாத அந்நிய(த் தொழிற் கலைஞ)ர்கள் மதீனாவில் அதிகம் இருக்க வேண்டுமென (இப்னு அப்பாஸ் அவர்களே!) நீங்களும் உங்கள் தந்தையார் (அப்பாஸ்) அவர்களுமே விரும்பக் கூடியவர்களாக இருந்தீர்கள்" என்று உமர்(ரலி) கூறினார். அவர்களிடையே அப்பாஸ்(ரலி) அவர்களே நிறைய அடிமைகள் உடையவராக இருந்தார்கள். அப்போது இப்னு அப்பாஸ்(ரலி) (உமர்(ரலி) அவர்களை நோக்கி), நீங்கள் விரும்பினால் (மதீனாவிலுள்ள அரபுகளல்லாத தொழில் கலைஞர்கள் அனைவரையும்) கொன்று விடுகிறோம் என்று கூறினார்கள், உமர்(ரலி), நீங்கள் (இந்த எண்ணத்தினால்) தவறிழைத்து விட்டீர்கள். உங்களின் மொழியில் அவர்கள் பேசிய பின்பும், உங்களின் கிப்லாவை நோக்கித் தொழுத பின்பும், உங்களைப் போன்றே ஹஜ்ஜு செய்த பின்புமா? (முஸ்லிம்களான அவர்களைக் கொலை செய்யப் போகிறீர்கள்?) என்று கேட்டார்கள். பிறகு, (குற்றுயிராயிருந்த) உமர் (ரலி) அவர்களை அவர்களின் வீட்டிற்கு சுமந்து செல்லப்பட்டது. அவர்களுடன் நாங்களும் சென்றோம். அன்றைய நாளுக்கு முன்னால் எந்தத் துன்பமும் நிகழ்ந்திராதது போன்று மக்கள் (கடுந் துயரத்துடன்) காணப்பட்டனர். ஒருவர், அவருக்கு ஒன்றும் ஆகி விடாது என்கிறார். மற்றொருவர், அவருக்கு (மரணம் சம்பவித்து

விடும் என்று) நான் அஞ்சுகிறேன் என்று கூறுகிறார். அப்போது, (காயத்தின் ஆழத்தைக் கண்டறிவதற்காக) பேரீச்சம் பழச்சாறு கொண்டு வரப்பட்டது. அதை உமர்(ரலி) அருந்தினார்கள். உடனே, அது அவர்களின் வயிற்றின் (காயத்தின்) வழியாக வெளியேறியது. (வெளியில் வந்தது பேரீச்சம் பழச் சாறா அல்லது உமரின் இரத்தமா என்று பாகுபடுத்த முடியாத விதத்தில் இரண்டும் ஒரே நிறத்தில் இருந்ததால்) பிறகு, பால் கொண்டு வரப்பட்டது. அதை அவர்கள் அருந்தினார்கள். அதுவும் காயத்தின் வழியாக (வெள்ளை நிறத்தில்) வெளியேறிவிட்டது. அப்போது அவர்கள் இறக்கும் நிலையை அடைந்து விட்டார்கள் என்று மக்கள் அறிந்து கொண்டனர்.

அவர்களின் அருகே நாங்கள் சென்றோம். மக்கள் வந்து உமர்(ரலி) அவர்களைப் புகழ்ந்து பேசத் தொடங்கினார்கள். ஓர் (அன்சாரி) இளைஞரும் வந்தார். அவர், இறை நம்பிக்கையாளர்களின் தலைவரே! அல்லாஹ்வின் தூதருடனான (உங்களுடைய) தோழமை, இஸ்லாத்தில் (உங்களுக்கிருக்கும்) நீங்களே அறிந்துள்ள சிறப்பு, பிறகு நீங்கள் (ஆட்சித் தலைவராகப் பதவியேற்று (குடி மக்களிடையே) நீதியாக நடந்து கொண்டது, பிறகு (இப்போது) உயிர்த் தியாகம் (செய்யவிரும்புவது) ஆகியவற்றின் மூலம் அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள நற்செய்தி கொண்டு நீங்கள், மகிழ்ச்சி அடையுங்கள் என்று கூறினார். (இதைக் கேட்ட) உமர்(ரலி) இவையெல்லாம் எனக்கு (சாதகமாக இல்லாவிட்டாலும் பாதகமாக இல்லாமல் இருந்தாலே போதும் எனவே, இவை எனக்கு) சாதகமாகவும் வேண்டாம் பாதகமாகவும் வேண்டாம். சரிக்குச் சமமாக இருப்பதையே விரும்புகிறேன் என்று கூறினார்கள்.

> **நரகமில்லாத சுவன வாழ்வைச் சுவைக்க நாம் செய்யும் அமல்கள் அதுவும் உளத்தூய்மையுடன் அல்லாஹ்வுக்காக அவனின் திருத்தூதர் காட்டித்தந்த வழிமுறைப்படி முகஸ்துதியற்று இருந்தால்தான் கிடைக்கும்**

அந்த இளைஞர் திரும்பிச் சென்றபோது அவரின் கீழங்கி பூமியைத் தொட்டுக் கொண்டிருந்தது. (இதைக் கண்ட) உமர்(ரலி), அந்த இளைஞரை என்னிடம் திரும்ப அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். (அவர் திரும்பி வந்த போது), என்னுடைய சகோதரரின் மகனே! உன்னுடைய ஆடையை (பூமியில் படாமல்) உயர்த்திக் கட்டு! இது உன் ஆடையை நீண்ட நாள் நீடிக்கச் செய்யும் உன்னுடைய இறைவனுக்கு அஞ்சி நடப்பதுமாகும் என்று கூறினார்கள். (பிறகு தம் மகனை நோக்கி), உமரின் மகன் அப்துல்லாஹ்வே! என் மீது எவ்வளவு கடன் (பாக்கி) உள்ளது என்று பார் என்று கூறினார்கள். அவ்வாறே அவர்கள், கணக்கிட்டுப் பார்த்தனர். எண்பத்தாறாயிரம் (திர்ஹம், தீனார்) அல்லது அது போன்றது இருப்பதைக் கண்டார்கள். உமர்(ரலி), இந்தக் கடன்களை அடைப்பதற்கு உமரின் செல்வம் போதுமென்றால் அதிலிருந்து கொடுத்து விடு. அவ்வாறு போதுமானதாக இல்லாவிட்டால் (நம் கூட்டத்தாரான) அதீ இப்னு கஅப் மக்களிடம் கேட்டு (வாங்கிக்) கொள். அவர்களின் செல்வமும் போதுமானதாக இல்லாவிட்டால் (நம்முடைய குலமான) குறைஷிக் குலத்தாரிடம் கேட்டு (வாங்கிக்) கொள். இவர்களையும் தாண்டி வேறு யாரிடமும் செல்லாதே. (இவர்களிடம் கேட்டு வாங்கிய) பின், என் சார்பாக இந்தக் கடன்களை நீயே அடைத்து விடு! (பிறகு) இறை நம்பிக்கையாளர்களின் அன்னை ஆயிஷா அவர்களிடம் நீ சென்று, உமர் உங்களுக்கு ஸலாம் கூறுகிறார் என்று கூறு. "விசுவாசிகளின் தலைவர்" என்று (என்னைப் பற்றிக்) கூறாதே. ஏனெனில், நான் இன்று (முதல்) விசுவாசிகளுக்கு (ஆட்சித்) தலைவனல்லன். மேலும், (அன்னை ஆயிஷா(ரலி) அவர்களிடம்) உமர் தம் இரண்டு தோழர்கள் (நபி(ஸல்) மற்றும் அபூபக்கர்(ரலி) அடக்கம் செய்யப்பட்டுள்ள உங்களின் அறையில் அவர்கள்) உடன் தம்மையும் அடக்கம் செய்வதற்கு (உங்களிடத்தில்) அனுமதி கோருகிறார் என்று சொல் எனக் கூறினார்கள். ஆயிஷா(ரலி) அவர்களிடம் உமர்(ரலி) அவர்களின் புதல்வர் சென்று ஸலாம் கூறி, (வீட்டுக்குள் நுழைய) அனுமதி கேட்ட பிறகு வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

அப்போது ஆயிஷா(ரலி)அவர்கள் (உமர்(ரலி) அவர்கள் குத்தப்பட்ட செய்தியறிந்து) அழுது கொண்டு அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். அப்போது, அவர்களைப் பார்த்து, (என் தந்தை) உமர் இப்னு கத்தாப் தங்களுக்கு ஸலாம் கூறுகிறார்கள். தம் இரண்டு தோழர்களுடன் தம்மையும் அடக்கம் செய்வதற்குத் தங்களிடம் அனுமதி கேட்கிறார்கள் என்று கூறினார்கள். அப்போது ஆயிஷா(ரலி), எனக்காக அ(ந்த இடத்)தை (ஒதுக்கிக் கொள்ள) நான் நினைத்திருந்தேன். (இப்போது அங்கு அடக்கம் செய்யப்படுவதற்கு) என்னை விட முதலிடம் கொடுத்து விட்டேன். (அவரையே அந்த இடத்தில் அடக்கிக் கொள்ளுங்கள்) என்று கூறினார்கள்.

பிறகு அவர்கள் (உமர்(ரலி) அவர்களிடம்) திரும்பி வந்தபோது, இதோ, உமர் அவர்களின் மகன் அப்துல்லாஹ் வந்துவிட்டார்கள் என்று கூறப்பட்டது. (ஒருக்களித்துப் படுத்திருந்த) உமர்(ரலி), என்னைத் தூக்கி உட்கார வையுங்கள் என்று கூறினார்கள். அப்போது (அங்கிருந்த) ஒருவர் தன்னோடு அவர்களை அணைத்துக் கொண்டு சாய்த்து அமர்த்தினார். அப்போது உமர்(ரலி) (தம் மகனை நோக்கி), உன்னிடம் என்ன (பதில்) உள்ளது? என்று கேட்டார்கள். நீங்கள் விரும்பியது தான், இறை நம்பிக்கையாளர்களின் தலைவரே! (ஆயிஷா (ரலி) அனுமதித்து விட்டார்கள் என்று அப்துல்லாஹ் கூறினார்கள். *(புகாரி) ஹதீஸின் ஒரு பகுதி).*

தன்னலமற்ற தன்னடக்கமுள்ள பழிவாங்கும் எண்ணமற்ற தான் ஒரு மக்களின் தலைவர் என்கிற பெருமையில்லாத பொறுமையாளராக உமர்(ரலி) அவர்கள் இருந்ததை மேற்கூறிய ஹதீஸில் கண்டோம். ஆகவே நரகமில்லாத சுவன வாழ்வைச் சுவைக்க நாம் செய்யும் அமல்கள் அதுவும் உளத்துாய்மையுடன் அல்லாஹ்வுக்காக அவனின் திருத்துாதர் காட்டித்தந்த வழிமுறைப்படி முகஸ்துதியற்று இருந்தால்தான் கிடைக்கும்.

இணைவைப்பிலிருந்து மீண்ட நாம், மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்பட்ட நூதன காரியங்களில் (பித்அத்) இருந்து விடுபட்ட நமது அமல்களின் ஏடுகள் களங்கமில்லாத தெளிவான நிலையில் காலியாகத்தான் இருக்கிறது. அதனை அல்லாஹ்வின் திருப்பொருத்தம் பெற்ற அமல்கள் செய்து நிரப்பி படைத்தவன் நேர்வழியாளர்களுக்கு சித்தப்படுத்தி வைத்திருக்கும் ஜன்னத்துல் ∴பிர்தவ்ஸ் எனும் உயர்ந்த சுவனத்தைப் பெற முயற்சிப்போமாக.

**-(முற்றும்)**

# மினா சம்பவத்திற்கு யார் பொறுப்பாளி?

கடந்த 12-ந்தேதி ஜனவரி 2006 (துல்ஹஜ் பிறை 12) மதியம் 12.30லிருந்து 1.30க்கு இடைப்பட்ட நேரத்தில் மினாவில் கூட்ட நெரிசலில் இறந்த 363 பேர்களின் இறப்புச் செய்தி பலரை துயரத்தில் ஆழ்த்திவிட்டது. ஊடகங்களால் மேம்போக்காக பார்க்கப்படும் இந்நிகழ்ச்சி மற்றும் அதனை பிரதிபலிக்கும் மக்களின் மனநிலை இவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டதோடு, இதுபோன்ற துயர சம்பவம் இனிமேலும் நடவாமல் இருக்க ஒரு துரும்பையாவது நகர்த்த வேண்டும் என்ற எண்ணத்திலேயே இதை நாம் பிரசுரிக்கின்றோம்.

வந்திருந்த ஹாஜிகளின் எண்ணிக்கை குறைந்த பட்சம் 25 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 363 பேர்களின் இறப்பு (0.015 சதவீதம்) ஒரு குறிப்பிட்ட நிகழ்வால் மட்டுமே நடந்திருப்பதால், அதனைத் தடுக்க வேறு வழியே இல்லையா? என்பதுதான் நம் அனைவரின் கேள்வியாக இருக்கிறது.

சம்பவம் நடந்த பாலத்தை இடித்துவிட்டு 4 அடுக்குகளில் 4.2 பில்லியன் சவுதி ரியால் செலவில் மிக நவீன வசதிகளுடன் ஏர் ஆம்புலன்ஸ் இறங்க 2 ஹெலிபேட் வசதிகளுடன் கட்டுவதற்காக கடந்த 15ந் தேதியே பாலம் இடிப்பு பணிகள் துவங்கிவிட்டன.




பாலத்தின் இரு ஓரங்களிலும் உள்ள 8 கட்டடங்களின் வழியே ஹாஜிகள் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் வசதியாக 90 மீட்டர் அகலத்திற்கு எஸ்க்லேட்டர்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

ஒவ்வொரு முறையும் ஏதேனும் அசம்பாவிதங்கள் நடந்துவிடும்போது அதனைத் தடுக்க புதிய வழிகளை கையாளுகிறார்கள். ஆனால் பிரச்னை புதிய உருவில் வந்துவிடுகிறது. இதுபோன்ற துயரச் சம்பவங்களைத் தவிர்க்க என்ன முன் ஏற்பாடுகள் செய்துள்ளார்கள், என்பதை நடந்து முடிந்த ஹஜ்ஜில் அங்கு இருந்ததாலும் நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சி செய்திகளின் உதவியோடு எழுதுகிறேன்.

டெண்ட் சிட்டி என்று அழைக்கப்படும் மினாவில் எந்த வசதியும் இல்லாததுபோல் ஊடகங்களால் விமர்சிக்கப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு ஹாஜிகளின் கூடாரங்களில் தீ விபத்து ஏற்பட்டதால் தீ பற்றாத கூடாரங்களை உடைய நவீன குளிர்சாதன வசதியுடன் கூடிய முதவ்வி∴ப் என்ற ஒழுங்குமுறையை பல கோடி பொருட் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அருகருகே கூடாரங்களை தவறவிட்டவர்களுக்கு சவுதி சாரணர்களால் வழிகாட்டப்படுகின்றது. இந்த அலுவலகத்தின் மேல் வட்டவடிவ பலகையில் "i" என்று பெரிதாக எழுதியிருக்கும். ஆங்காங்கே முதலுதவி மருத்துவ மையங்கள் உள்ளன. நடந்து வரும் ஹாஜிகள் குறுக்குவழியாக மினாவை அடைவதற்கு குகைப் பாதைகள் (ஒரு வழிப்பாதை) உதவுகின்றன. இக்குகைகள் இராட்சத மின்விசிறிகளை வைத்து காற்றோட்டம் செய்யப்படுகிறன. ஜமராத் பாலத்தின் மேற்பகுதிக்கு செல்லும் வழியில் நவீன மின்னணு அறிவிப்புப் பலகைகள் உள்ளன. ஜமராத் பாலத்திற்கு பயணப் பொருட்களை (Luggages) கொண்டு செல்லாதீர்கள் போன்ற எச்சரிக்கை வாசகங்கள் அடங்கிய விளம்பரங்கள் ஆங்காங்கே தென்படுகின்றன. ஜமராத் சுவற்றில் மக்கள் நசுங்கிவிடக்கூடாது என்பதற்காக முதலாவதாக எதிர்படும் முனையில் இராணுவங்களை நிறுத்திவிடுகிறார்கள். அதன் முனை நீள் வட்ட வடிவத்தில் இருக்கும். செம்பிறை ஆம்புலன்ஸ்கள் எப்போதும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுவல்லாமல் கூட்டத்தில் புகுந்து செல்லக்கூடிய மற்றும் ஒரு ஆள் படுக்கக்கூடிய வகையில் பலவகை அவசர ஊர்திகள் (ஆட்டோ, மோட்டார் பைக் உட்பட) தயார் நிலையில் உள்ளன. போலீஸ், செக்யூரிட்டி, தீயணைப்பு, இராணுவம், தற்காலிக ஊடக இணைப்பாளர்கள் என சுமார் 60,000 பேர் குவிக்கப்பட்டுள்ளனர். வாகனங்கள் செல்வதற்கு தனித் தனியாக பல வழிகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். குறைந்தது 3 ஹெலிகாப்டர்கள் மேலே வட்டமிட்டபடியே இந்த 6 நாட்களும் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்படுகின்றன. மேலும் தொற்று நோயை தவிர்க்க தடுப்பூசி போட்டதற்கான அத்தாட்சி இருந்தால்தான் ஹஜ் செய்ய அனுமதி கிடைக்கும். (தடுப்பு ஊசி, மக்கா செல்வதற்கு 15 நாட்களுக்கு முன்னரே போட்டால்தான் அதன் முழுமையான பலன் கிடைக்கும்)

ஆனால், "பல வசதிகளும் முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தும் ஏன் இந்த உயிர்ச் சேதங்கள் நிகழ்கின்றன?" என்பதுதான் இங்கு கேட்கப்படும் முக்கிய கேள்வியாகும். நிர்வாகம் எத்தனை வழிகளில் முயற்சி செய்தாலும் ஹாஜிகளும் ஒத்துழைக்க வேண்டும் அல்லவா? உள்நாட்டில் உள்ளவர்கள் 5 வருடத்திற்கு ஒரு முறைதான் ஹஜ் செல்ல அனுமதி கிடைக்கும். ஆனால், வெளிநாட்டிலிருந்து வருபவர்களுக்கு கட்டுப்பாடு இல்லை.

## இதுபோன்ற துயரச் சம்பவங்களுக்கு பொறுப்பு யார்?

துல்ஹஜ் பிறை 8-லிருந்து 12 அல்லது 13 வரை ஹஜ்ஜின் முக்கிய நாட்களாகும். மக்கா, மினா, முஸ்தலி∴பா, அர∴பா ஆகியவை ஹஜ் காரியங்கள் செய்யும் இடங்களாகும்.

பெரும்பாலும் துயர சம்பவங்கள் துல்ஹஜ் பிறை 12-ல் மட்டுமே அதிகம் நிகழ்கிறது. அதற்கு காரணம், அன்று ஜமராத்திற்கு கல்லெறிந்துவிட்டு சூரியன் மறைவதற்கு முன்பு மினாவில் இருந்து புறப்பட்டுவிட வேண்டும். இல்லையென்றால் 13-ம் பிறையும் தங்கி கல்லெறிந்துவிட்டுத்தான் புறப்பட வேண்டும். கல்லெறியும் நேரம் சூரியன் உச்சியிலிருந்து சாயத் தொடங்கியவுடன் ஆரம்பமாகிறது. சுமார் 12 மணியிலிருந்து அடுத்த 6 மணி நேரத்திற்குள் 90 சதவீத ஹாஜிகள் கல்லெறிந்துவிட போதுமான அவகாசம் கிடையாது. உள்நாட்டிலிருந்து வந்த ஹாஜிகளுக்கு துல்ஹஜ் பிறை 13, 14 -ல் வேலைக்கு செல்லவேண்டும் என்ற அவசரம். வெளிநாட்டு ஹாஜிகளுக்கு மக்காவில் உள்ள தங்குமிடத்திற்கு சென்று இளைப்பாற வேண்டும். அதற்கு காரணம், ஹஜ்ஜிற்கு வரும் பலர் முதிய வயதில் உடல் வலிமையற்றவர்களாக வருகிறார்கள்.

ஹஜ் செய்வதற்கு பொருள் பலமும் உடல் பலமும் இருந்தால் மட்டுமே கடமை. ஆனால் உடல் பலம் இருக்கும்போது பலருக்கு ஹஜ் கடமை ஞாபகம் வருவதில்லை என்பது வருந்தத்தக்க விஷயம்.

இங்கு வரும் ஹாஜிகள் பலருக்கு ஹஜ் செய்வது எப்படி என்று தெரியாததால் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மார்க்க சலுகைகள் தெரிவதில்லை. அதிக நெரிசலில் பலகீனமானவர்கள் மற்றும் பெண்கள் ஜமராத்திற்கு சென்று கல் எறிவதற்கு பதிலாக மற்றவர்களிடம் கொடுத்து எறியச்செய்யலாம்.

ஹாஜிகளில் சிலர் சூழ்நிலையை உணர்ந்து அதற்கு தக்க தங்கள் நடவடிக்கைகளை வைத்துக்கொள்வதில்லை. பிறை 12 அன்று கல்லெறிய போகும்போது பயணப் பொருள்களை கூட எடுத்துச்செல்கிறார்கள். பொருள் கீழே விழுந்ததால் எடுக்க குனிந்தபோது நடந்த விபரீதம்தான் இத்தனைப் பேரை இழக்கச் செய்திருக்கிறது.

ஹாஜிகளில் சிலர் முறையான அனுமதி இல்லாமல் வந்தவர்களாகும். ஆகவே இவர்கள் 6 நாட்களும் ஜமராத்தை சுற்றியுள்ள பெருவெளியில் தங்கிவிடுகிறார்கள். பல தற்காலிக கூடாரங்களை சர்வ சாதாரணமாக இங்கு காணமுடிகிறது. மக்காவிலிருந்து மினா, முஸ்தலி∴பாவின் ஒரு பகுதி வரை நடை வழியாக செல்லும் ஹாஜிகளுக்கு நிழல்தரும் விதமாக இரும்பு பந்தல் அமைப்பை ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள். இதிலும் இவர்களே நிரம்பியுள்ளார்கள். இத்தகையவர்கள் மீது நிர்வாகம் நடவடிக்கை எடுத்தால் இதுபோன்ற துயரச் சம்பவங்கள் குறையலாம்.



தற்போது இறந்தவர்களில் பலர் (3ல் 1 பங்கு) இதுவரை அடையாளம் தெரியவில்லை. காரணம் இவர்கள் ஹஜ்ஜிற்கு முறையான அனுமதி பெறாமல் வந்திருப்பதுதான். அனுமதியுடன் வந்தவர்களுக்கு கைகளில் கட்டப்படும் தங்குமிடம் அடையாளத்துடன் கூடிய வளையம் கொடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல் ஒரு பிளாஸ்டிக் வளையமும், தொலைபேசி எண், போட்டோவுடன் உள்ள கார்டும் கொடுக்கப்படும். இந்த அடையாளங்கள் அவர்கள் எந்த கூடாரத்தை மற்றும் நாட்டைச் சேர்ந்தவர் என்பதை காட்ட உதவுகின்றன.

## துயரச் சம்பவங்களைத் தடுக்க

தற்போது ஹஜ் பயணத்திற்கு வந்தவர்களில் சிலர் முன்பே ஹஜ் செய்தவர்களாகும். நெருக்கடியால் ஏற்படும் விபத்து போன்ற சூழ்நிலையை நினைத்து, இவர்கள் புதியவர்களுக்கு வழிவிடவேண்டும். வழிகாட்டியாகவோ அல்லது மனைவி மற்றும் வயதானவர்களுக்கு துணையாகவோ வரும் சூழ்நிலை ஏற்பட்டாலே தவிர ஏற்கனவே ஹஜ் செய்தவர்கள் மீண்டும் ஹஜ்ஜிற்கு வரக்கூடாது என்று அவரவராகவே முடிவு எடுக்க வேண்டும்.

பணம் இருக்கிறது என்பதற்காக வருடா வருடம் ஹஜ் செய்யும் ஹாஜிகள், தங்களின் உறவினரான மற்றும் தெருவிலுள்ள, ஊரிலுள்ள, நாட்டிலுள்ள, உலகத்திலுள்ள ஏழைகளுக்கு உதவி செய்வதையும் நினைத்துப் பார்க்கட்டும். வசதி இருந்தால் (உடல்வலிமை மற்றும் பண வசதி) ஒரு தடவை ஹஜ் செய்வது கடமையாகும். ஒரு முறை செய்யவேண்டிய வணக்கத்தை வருடா வருடம் செய்யும் ஹாஜிகள், தினமும் செய்ய வேண்டிய தொழுகை போன்ற வணக்கங்களை பலர் செய்யாமல் இருப்பது ஏனோ? ஹஜ்ஜுடைய காலங்களில் நெருக்கடி காரணமாக ஒருவர் இறந்தால் மீண்டும் மீண்டும் ஹஜ் செய்ய வந்தவரும் அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கிறார் என்பதை நினைத்து வெட்கப்பட வேண்டாமா?

## நேரில் கண்ட காட்சிகள்

துல்ஹஜ் 12 பிறை அன்று நெரிசலாக இருக்கும் என்பதால் பெண்களையும் குழந்தைகளையும் கூடாரங்களில் இருக்கச் செய்துவிட்டு ஆண்கள் மட்டும் கல் எறிவதற்காக வெளியேறினோம். (வலது புறத்தில் கூட்டத்தின் அடர்த்தி குறைவாக தெரிந்தமையால் அங்கு நகருவதைத்தவிர வேறு வழி தெரியவில்லை) சம்பவம் நடந்த இடம் 5 நிமிட நடை தூரத்தில் இருக்கும்போது எங்களுடன் வந்தவர்களில் பாதிபேர் பிரிந்து விட்டார்கள். அவர்கள் இடதுபுறமாக சென்றிருக்க வேண்டும். அப்போதுதான் இராணுவத்தினர் வந்து மனித பாதுகாப்பு வளையத்தை உருவாக்கி ஆம்புலன்ஸிற்கு வழிவிட்டார்கள். 1, 2, 3 என்று தொடங்கி நிறைய ஆம்புலன்ஸ்கள் வரத்தொடங்கிவிட்டன. உள்புறத்தில் ஆபத்து நிலையில் உள்ளவர்களும் மேற்புறத்தில் சிறிது பாதிக்கப்பட்டவர்களும் ஏற்றப்பட்டார்கள். அவை செல்வதற்கு ஏதுவாக இராணுவம் வசதி செய்து தந்தமையால் அந்த அடர்த்தியான கூட்டத்திலும் ஆம்புலன்ஸ்கள் நகரத் தொடங்கிவிட்டன. அப்போதுகூட இத்தனை மரணங்கள் நிகழ்ந்திருக்கும் என்று நாங்கள் நினைத்துப் பார்க்கவில்லை.

கல்லெறியும் இடத்தில் விபத்துக்களைப் பார்ப்பதற்காக ஜமராத் பாலத்திற்கு ஹாஜிகள் நெருங்கும்போது காவலர்கள் அவர்களை தடுத்து சிறிது சிறிதாக அனுமதிக்கிறார்கள். தடுக்கப்பட்டு நிற்பவர்களில் சிலர் தனக்கு முன்னே நிற்பவர்களை கண்டு கொள்ளாமல் முண்டியடித்துக்கொண்டு முன்னேற பாய்வார்கள். இவ்வாறானோர் தான் பிரச்னையே. இதனால்தான் மக்கள் ஒருவர் மீது ஒருவர் விழுந்து மரணிக்கின்றனர்.

அப்போது “ஜமராத்தின் இடது புறமாக செல்லுங்கள்” என்று ஒலிப்பெருக்கியில் அறிவித்தார்கள். எனவே மெதுவாக இடதுபுறமாக மக்கள் வெள்ளத்தில் நீந்தினோம். இதில் யாராவது சற்று சறுக்கினால் எழுந்திருக்க வாய்ப்பில்லை என்பதை புரிந்து ஜாக்கிரதையாக கால்வைத்து சென்றோம். முழங்கால் அளவு பொருட்கள் விழுந்துகிடந்தது. பயண சாமான்களை கையில் சுமந்திருப்பவர்களை பாலத்தின் கீழ்பகுதிக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். பாலத்தின் மேற்புறம் கல் எறிவது போல, பாலத்தின் கீழ்புறமும் எறிய கற்களை எறிய முடியும்.

பாலத்தின் மேற்புறம் ஒருவழி பாதைதான். கல் எறிந்தவுடன் திரும்பிவர இயலாது. வலது, இடது என பிரியும் பாலத்தின் இரண்டு கிளைகளின் வழியே நாம் செல்ல வேண்டிய வழியை அடைந்துவிடலாம். ஆனால் கீழ் புறத்தில் எதிர்பார்க்காதபோது திடீர் திடீரென மக்கள் கூட்டம் வரலாம்

என்பதால் அதனைத் தவிர்த்துவிட்டோம். மெதுவாக நகர்ந்து நசுங்கி பிழியப்பட்டு ஜமராத் பாலத்தின் ஆரம்பத்தை அடைந்துவிட்டோம். பாலத்தில் நுழைந்தவுடன்தான் நெருக்கம் குறைந்திருந்தது.

உயிர் சேதத்தைத் தவிர்க்க சென்ற வருடம்தான் (ஹஜ் 2005) தூண் போல இருந்த ஜமராத் உயிர் சேதத்தைத் தவிர்க்க சுவர் போன்று நீட்டி கட்டியிருந்தார்கள். கூட்டம் நிரம்பி வழிந்தது. நாங்கள் வலது புறமாக பாலத்தின் விளிம்பிற்கு ஒதுங்கி ஜமராத்தின் இறுதி வந்ததும் இடது புறமாக ஜமராத்தை நெருங்கினோம். மக்கள் ஜமராத்தை நெருங்கி கல் எறிந்துவிட்டு "V" வடிவத்தில் பிரிந்து சென்றார்கள். ஜமராத்தின் முடிவில் கூட்டம் இல்லாததால் அங்கு நின்றுக்கொண்டு "அல்லாஹு அக்பர்" என்று சொல்லி பட்டாணி அளவில் இருக்கும் 7 கற்களை ஒவ்வொன்றாக ஜமராத் சுவரின் மீது எறிந்தோம். ஜமராத்தின் சுவரை நெருங்க முடியாதவாறும், எறிந்த கற்கல் நமது தலையில் விழாதவாறும் கட்டியிருந்தார்கள்.

நான் சற்று கவனித்தபோது சில செருப்புகளும் அவ்வப்போது வந்து விழுவது தெரிந்து. சிலர் இதனை ஷைத்தான் என்று நினைத்துக்கொண்டு அறியாமையினால் இவ்வாறு செய்கிறார்கள்.

3 ஜமராத்திற்கும் கல் எறிந்துவிட்டு வலது புறத்தில் உள்ள கீழிறங்கும் வழியை அடைந்த போது இறந்த உடல்களை, குளிரூட்டப்பட்ட பெருவாகனத்தில் அடுக்கிக்கொண்டிருந்தார்கள். வாகனத்தில் மட்டுமே 21 இருப்பதாக நண்பர் சொன்னார். அதுவல்லாமல் கீழே வரிசையாக வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டு இருந்த உடல்களை சரியாக கணக்கிடும் அளவிற்கு தூரத்திலிருந்து பார்க்க இயலவில்லை. ஆகவே பாதைவழியே இறங்கத் தொடங்கினோம். இறந்தவர்களை அடுக்க குளிரூட்டப்பட்ட புதிய பெருவாகனம் வந்து நின்றது. ஒவ்வொரு தொலைக்காட்சி சேனலிலும் 400, 500, 700 என்று இஷ்டத்திற்கு ஃபிளாஷ் செய்தி வந்ததால் அவரவர் குடும்பத்தினர்களும் நண்பர்களும் செல்பேசியில் தொடர்பு கொண்டார்கள்.

நாங்கள் ஜமராத் பாலத்தில் இருந்தபோது முதியவர் ஒருவர் சப்தமாக, "ஹாஜிகளை ஹாஜிகள் கொல்வார்களா" என்று சம்பவம் நடந்த திசைநோக்கி கைகாட்டி புலம்பிக்கொண்டிருந்ததை நினைத்தால் நெஞ்சம் கனக்கிறது.

*– (அபூ உமர்)*

⋆ ⋆ ⋆

# இந்தியா..!ஒளிரும் சில தகவல்கள்!!

❖வெளிநாடுகளில் வேலை செய்யும் இந்தியர்கள் (NRI) ஆண்டுதோறும் நம் நாட்டுக்கு அனுப்பும் தொகை 83,250 கோடி ரூபாய்

❖ஆண்டு தோறும் சுமார் 4 லட்சம் இந்தியர்களுக்கு வெளிநாடுகளில் வேலை கிடைக்கிறது.

❖அமெரிக்க கம்பெனிகளுக்காக இந்தியாவில் இருந்தபடியே வேலை செய்யும் கம்ப்யூட்டர் ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 70 ஆயிரம்.

❖இந்தியாவில் 3 கோடியே 80 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்குகிறது நெசவுத் துறை.

❖உலகின் சிறந்த 20 வங்கிகளில் 16 வங்கிகள் இந்தியாவில் செயல்படுகின்றன.

❖21 பிராண்ட் கார்கள் இந்தியாவில் விற்பனை ஆகின்றன.

❖இந்தியாவில் தயாராகும் மாருதி கார்களை ஜப்பானின் சுஸ்கி நிறுவனம், ஐரோப்பாவின் அத்தனை நாடுகளிலும் விற்பனை செய்கிறது.

❖உலகிலேயே ஆண்டுக்கு 17 லட்சம் மோட்டார்களைத் தயாரிக்கும் நிறுவனம் இந்தியாவிலுள்ள "ஹீரோ ஹோண்டா"

❖தற்போது இந்தியாவில் (2005-ஆம் ஆண்டு வரை) 3 கோடியே 60 லட்சம் மொபைல் போன்கள் புழக்கத்தில் இருக்கின்றன.

❖ஹெல்த், டூரிஸம் மூலம் நம் நாட்டின் வருமானம் ஆண்டுக்கு 86,000 கோடி ரூபாய்.

❖இந்தியாவிலுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை 12 லட்சம்.

❖இந்தியர்கள் ஆண்டுக்கு 4,200 கோடி ரூபாயைத் தர்ம காரியங்களுக்குச் செலவிடுகிறார்கள்.

❖இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஆண்டுக்கு 60 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் கம்ப்யூட்டர் மென் பொருட்கள் ஏற்றுமதியாகின்றன.

❖உலக அளவில் I.T துறையில் கில்லாடிகள் என்ற பட்டியலில் இந்தியா 3-வது இடம் வகிக்கிறது.

❖இந்தியாவில் மென்பொருள் தயாரிப்பில் முதல் இடம் கர்நாடகமும், இரண்டாவது இடம் தமிழ்நாடும் வகிக்கிறன.

❖விரைவு நுகர்வு பொருட்கள் (FMCG) விற்பனையின் அளவு ஆண்டுக்கு அறுபது ஆயிரம் கோடி ரூபாய்.

❖இந்தியாவில் தற்போது 60 லட்சம் கம்ப்யூட்டர்கள் புழக்கத்தில் இருக்கின்றன.

❖இந்தியாவில் 24 ஆயிரம் மருந்து தொழிற்சாலைகள் இருக்கின்றன.

❖ஆண்டு ஒன்றுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மருந்து உற்பத்தி செய்யப்படுகிறது.

❖உலகிலேயே உயிர் காக்கும் மருந்துகள் மிகவும் தரமானதாகவும் மிகவும் குறைந்த விலையிலும் தயாரிக்கும் நாடு இந்தியாதான்.

❖மற்ற எல்லா நாடுகளை விடவும் இந்தியாவில்தான் மிகக் குறைந்த அளவில் மக்கள் மருந்து, மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்கள்.

❖உலகின் மிகப்பெரிய ரயில்வே நெட்வொர்க் நமது இந்தியன் ரயில்வேதான்.

❖உலகிலேயே இந்தியாவில்தான் அதிகமான சினிமாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

❖இந்தியாவிலேயே பணப் புழக்கம் அதிகமாக உள்ள நிறுவனங்களில் முதல் நிறுவனம் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்தான். (ஆண்டுக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய்)

❖இந்தியாவில் கம்ப்யூட்டர் கல்வித் துறையில் புழங்கும் பணத்தின் மதிப்பு ஆயிரம் கோடி ரூபாய்.

இன்னும் பல அரிய தகவல்களுடன், அடுத்த இதழில்.

**தொடரும் (இன்ஷாஅல்லாஹ்)**

***- கோவை. பஷீர்***

*- முதல் பக்கத் தொடர்ச்சி..*

என்றால் சுவர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட நபித்தோழர்களான உமர்(ரலி), உஸ்மான்(ரலி), அலி(ரலி) போன்றவர்கள் ஷஹீதாக்கப்பட்ட நாட்களையும் துக்கம் அனுஷ்டிக்கும் நாட்களாக எடுத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? நபி(ஸல்) அவர்களின் பெரிய தந்தை ஹம்ஸா(ரலி) அவர்கள் கோரமாக உஹத் போர்க்களத்தில் ஷஹீதாக்கப்பட்ட நாளை துக்கம் அனுஷ்டிக்கும் நாளாக எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லவா? இப்படிக் கடந்த ஒவ்வொரு நாளிலும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் அநியாயமாக ஷஹீதாக்கப்படாத நாட்கள் இல்லையென்று கூறலாம். இவர்களின் கருத்துப்படி ஒவ்வொரு நாளும் துக்கம் அனுஷ்டிக்கும் நாளேயாகும். அப்படி இவர்களும் கூறுவதில்லை. இத்துடன் அவர்கள் முடித்துக் கொள்ளாமல் துக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக பல்வேறு அனாச்சாரங்களையும் செய்கின்றார்கள். இவர்கள் செய்யும் அனாச்சாரங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

முஹர்ரம் மாதம் பிறந்துவிட்டது என்றால் பல்வேறு அனாச்சாரங்கள் அரங்கேறுவதைப் பார்க்கின்றோம். ரதம் போன்று ஒற்றை ஜரிகைகளாலும், வர்ணங்களாலும் அலங்கரித்து இறுதியில் அதை நதிகளில் போட்டு அழிப்பது இது போன்ற நிகழ்வுகளை “பஞ்சா” என்ற பெயரில் பலர் இந்தியாவின் பல பகுதிகளிலும் செய்து வருகின்றனர். மும்பை, குஜராத், உத்திரப்பிரதேசம் மற்றும் தமிழகத்தில் மேலப்பாளையம், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஷியாக்கள் வாழக்கூடிய பகுதிகளில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

முஹர்ரத்தின் முதல் பத்து நாட்களில் நடக்கும் அனாச்சாரங்களைக் கூர்ந்து கவனித்தால் இது இஸ்லாத்தில் உள்ள பண்டிகை அல்ல என்பதை அறிந்து கொள்ளலாம். உதாரணமாக முஹர்ரம் பண்டிகையில் தீ மிதித்தல், பூக்குளித்தல், உடல் முழுவதும் சந்தனம் பூசி பிச்சை எடுத்து காணிக்கை செலுத்துதல் மேலும் மாற்று மதத்தவர்கள் தம் கடவுளுக்கு ரதம் அமைத்து ஊர்வலம் செல்வது போன்று நம் சகோதரர்களும் இதுபோன்று ரதம் அமைத்து அதனுள் பஞ்சா(கைவிரல்கள்) செய்து அதனை ஊர்வலமாக எடுத்துச் சென்று நதிக்கரையில் கரைக்கின்றனர். இது விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை முழுக்க முழுக்கத் தழுவியிருக்கிறது.

முஹர்ரத்தின் முதல் பத்து நாட்களில் இறைவன் ஹலாலாக்கிய மீன் மற்றும் கறி போன்றவற்றை உண்ணாமல் தவிர்க்கின்றனர். இதற்காக ஒரு சிறுவனையோ அல்லது வாலிபனையோ பிரத்யேகமாக விரதம் இருக்கச் செய்து பத்தாம் நாள் அலங்கரித்த குதிரையில் ஏற்றி ஊர்வலம் செல்வர். இந்த சிறுவனையும் அவனை ஏற்றி வரும் குதிரையையும் புனிதமாகக் கருதி கண்ணியமாக்குகின்றனர். இவ்வாறு நடத்தப்படும் எல்லா நிகழ்வுகளுக்கும் இஸ்லாத்திற்கும் எள் முனையளவும் சம்மந்தமில்லை. மாற்று மதக் கலாச்சாரங்களைப் பின்பற்றி ஷியாக்களால் உருவாக்கப்பட்டவைதான் இவையனைத்தும். குறிப்பாக அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் ஐந்து விரல்கள் கொண்ட கை ஒன்று வைக்கப்படும். இதன் தாத்பரியம் இஸ்லாத்தின் அடிப்படையையே தகர்க்கக் கூடியதாகும். அதாவது ஷியாக்களின் கொள்கையான ஐந்து புனிதர்களை வணங்கும் கொள்கைதான் இந்த பஞ்சாவின் அடிப்படையாகும். அதாவது

1) முஹம்மது(ஸல்) அவர்கள்

2) அவர்களின் திருமகளார் பாத்திமா(ரலி)

3) அலி(ரலி)

4) ஹஸன்(ரலி)

5) ஹுஸைன்(ரலி)

என்று ஐந்து பேரைக் குறிப்பிடுவதே இந்த பஞ்சா எனும் கையாகும். உருது மற்றும் ஹிந்தியில் “பாஞ்ச்” என்றால் ஐந்து என்று எல்லோரும் அறிவோம். இதை அடிப்படையாகக் கொண்டே பஞ்சா என்ற பெயர் வந்தது.

இறைவனை ஒருமுகப்படுத்தி அவனுக்கு இணையேதும் கூடாது என்று கூறும் இஸ்லாத்தில் இந்த ஐந்து தெய்வக் கொள்கை எப்படி சாத்தியமாகும்.

ஹஸன், ஹுஸைன் இருவரும் உலகின் இரு நறுமணம் மிக்க மலர்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் புகாரி) இப்படிப் பல சிறப்புகள் அவ்விருவருக்கும் உண்டு என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால் இவர்கள் பெயரால் நடத்தப்படும் பித்அத்துக்களை இஸ்லாம் ஒரு போதும் அனுமதிக்கவில்லை. குறிப்பாக இப்பஞ்சா ஊர்வலத்தில் “மாரடித்தல்” என்ற நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதாவது யா அலீ! யா ஹுஸைன்! என்று அவர்கள் இறந்த தினத்தில் மார்பில் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைப்பது பக்தி எனும் பெயரில் தன் உடம்பில் காயங்களை ஏற்படுத்திக் கொள்வது போன்றவற்றை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் (மரணித்தவருக்காக ஒப்பாரி வைத்து அழுது) தன் கன்னத்தில் அடித்துக் கொண்டோரும் சட்டையைக் கிழித்துக் கொண்டவரும், அறியாமைக்கால அழைப்பைக் கொண்டு அழைத்தவரும் நம்மைச் சார்ந்தவரல்ல.

***அறிவிப்பாளர் : இப்னு மஸ்வூது(ரலி)***
***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்***

மேலும் அல்லாஹ்வும் அவன் தூதரும் காட்டித் தராத வழியில் ஹுஸைன்(ரலி) அவர்களின் மறைவிற்காக நோன்பு வைப்பது அத்தினத்தை துக்க தினமாக அனுஷ்டிப்பது நேர்ச்சை செய்வது, பாத்திஹா ஓதிக் கொழுக்கட்டை போன்ற பதார்த்தங்களைப் பரிமாறுவது போன்ற அனாச்சாரங்களை முஸ்லிம்கள் களைவதோடு மற்ற அறியாத முஸ்லிம்களையும் எடுத்துக் கூறித் தடுக்க வேண்டும். ஊர்வலம் என்ற பெயரில் கொட்டு மேளதாளங்களுடன் செல்வதால் பல சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. மஹாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் இதுபோன்ற ஊர்வலங்களில் வன்முறை ஏற்பட்டு அரசாங்கம் இந்த பஞ்சா ஊர்வலத்தைத் தடை செய்துள்ளது. இதுபோன்ற அறியாமையினால் செய்யும் செயல்களால் மதக்கலவரங்கள் ஏற்படுகின்றன. அன்பிற்குரிய முஸ்லிம்களே! நமது இறைவன் ஒருவன்தான். அவனுக்கு எந்தவகையிலும் நாம் இணைவைக்கக் கூடாது.

***நபி (ஸல்) அவர்களின் மரணத்தோடு தூதுத்துவம் நிறைவுற்றுவிட்டது. அதற்குப்பின்னால் ஏற்படுத்தப்பட்ட அனைத்தும் பித்அத்துக்கள் ஆகும். நபி(ஸல்) அவர்கள் எந்த காரணத்திற்காக நோன்பு நோற்றார்களோ அதே காரணத்திற்காக நாமும்***

*(நபி(ஸல்) அவர்கள் நோற்ற நோன்பு அடுத்த பக்கத்தில்)*

***நோன்பு நோற்று அதற்குரிய முழு நன்மைகளையும் அடைய அல்லாஹ் அருள் செய்வானாக.***

## முஹர்ரம் பத்தாம் நாளில் செய்யும் நல் அமல்கள் – ஆஷூரா நோன்பு

முஹர்ரம் மாதத்தின் 10ஆம் நாள் நோன்பு நோற்பது சுன்னத்தாகும் (நபிவழியாகும்). நபி(ஸல்) அவர்கள் இந்த நாளில் நோன்பு நோற்றார்கள் - யூதர்களும் அந்த நாளில் நோன்பு நோற்றதால் அவர்களுக்கு மாறு செய்வதற்காக எதிர்வரும் வருடம் நான் உயிருடன் இருந்தால் 9ஆம் நாளையும் சேர்த்து நோன்பு நோற்பேன் என்றார்கள். இதனால் முஹர்ரம் மாதத்தின் 9 மற்றும் 10ஆம் நாட்களில் நோன்பு நோற்பது சுன்னத்தாகும்.

### ஆஷூரா நோன்பு ஏற்படுத்தப்பட்டதற்குரிய காரணம்

நபி(ஸல்) அவர்கள் மதீனாவிற்குச் சென்ற நேரம் யூதர்கள் நோன்பு நோற்றிருப்பதைக் கண்டு இது என்ன நோன்பு என வினவினார்கள். அதற்கு அவர்கள் இது நல்ல நாள், இந்த நாளில்தான் பனூ இஸ்ராயீல்களை அவர்களின் பகைவ (ஃபிர்அவ்)னிடமிருந்து அல்லாஹ் பாதுகாத்தான், அந்த நாளில் மூஸா(அலை) அவர்கள் நோன்பு நோற்றார்கள் என்று கூறினார்கள், அதற்கு நபி(ஸல்) அவர்கள் உங்களைவிட மூஸா(அலை) அவர்களை (மதிப்பதற்கு) நான் தகுதியுடையவன் என்று கூறி அந்த (முஹர்ரம் பத்தாம் நாள்) நோன்பை நோற்றார்கள், அந்த நோன்பை நோற்பதற்கு (மக்களையும்) ஏவினார்கள்.

***அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி)***
***ஆதாரம் : புகாரி.***

**ஆஷூரா நோன்பைப் பற்றியுள்ள ஹதீஸ்கள்**

1. ஆஷூரா நோன்பைப்பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது, அதற்கு அவர்கள் சென்ற வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரமாக அமையும் என்று விடையளித்தார்கள்.

***அறிவிப்பவர் : அபூகதாதா(ரலி), ஆதாரம் : முஸ்லிம்.***

2. நபி(ஸல்) அவர்கள் ஆஷூரா தினத்தன்று நோன்பு நோற்று (மற்ற மக்களையும்) நோன்பு நோற்குமாறு ஏவினார்கள்.

***அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரலி)***
***ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.***

3.ரமலான் நோன்பிற்குப் பிறகு சிறந்த நோன்பு அல்லாஹ்வுடைய மாதமாகிய முஹர்ரத்தின் நோன்பாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி)***
***ஆதாரம் : முஸ்லிம்.***

4. எதிர்வரும் வருடம் (உயிருடன்) இருந்தால் ஒன்பதாவது நாளும் நோன்பு நோற்பேன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரலி)***
***ஆதாரம் : முஸ்லிம்.***

முஹர்ரம் மாதத்தின் 9 மற்றும் 10ஆம் நாட்களில் நபியவர்கள் எதற்காக நோன்பு நோற்றார்கள் என்பதை அறிவீர்கள். மேலும் நோன்பைத்தவிர வேறு எந்த விஷேச வணக்கங்களையும் நபியவர்கள் செய்யவில்லை. நபியவர்களை பின்பற்றும் நாமும் அதைத்தான் செய்ய வேண்டும், அதை விட வேறு எதையாவது செய்து விட்டு இதுவும் சுன்னத் அல்லது வணக்கம் என்று சொன்னால் அல்லாஹ்வின் மீதும் அவனின் தூதர் மீதும் இட்டுக்கட்டுவதாகும், இதற்கு “பித்அத்” என்று சொல்லப்படும்.

***ஆகவே முஹர்ரம் மாதத்தின் ஒன்பது மற்றும் பத்தாம் நாள் ஆஷூரா நோன்பை மாத்திரம் நோற்போம். இது அல்லாத சடங்கு சம்பிரதாயங்களை தகர்த்தெரிந்து நபி☆வழி நடப்போமாக.!***

☆ ☆

## அயோடின் சில சத்தான தகவல்கள்

அயோடின் இயற்கையில் கிடைக்கக்கூடிய ஒரு தனிமம். பூமியில் கிடைக்கும் அறிய வகை தாதுக்களில் 62 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மருந்து தயாரிப்பில் அயோடின் பெரிதளவும் பயன்படுத்தப்படுகிறது.

அயோடின் மனிதனின் சரியான உடல் வளச்சிக்கும், மூளை சீராக செயல்படுவதற்கும் உதவுகிறது.

அயோடின் குறைபாடு உள்ளவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் மந்தமாக இருப்பார்கள். பெண் கருவுற்று இருக்கும் போது சரியான அளவு அயோடின் சத்து கிடைக்காத பட்சத்தில் பிறக்கும் குழந்தை உடல் குறைவுடனும், மூளை வளர்ச்சி குன்றியும் பிறக்க வாய்ப்புகள் உள்ளன.

இந்த அயோடின் சத்து குறைவால் முன் கழுத்துக் கழலை (Goiter) நோய், காது கேளாமை, பார்வை இழப்பு, புத்திக் கூர்மை குறைவு கருச்சிதைவு, குறைப் பிரசவம் போன்ற பல உபாதைகள் ஏற்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது.

உலக அளவில் வருடத்திற்கு 30,000 குழந்தைகள் அயோடின் சத்துக் குறைவால் கருச்சிதைவு (Abortion) ஏற்பட்டு இறக்கின்றன. 1,20,000 குழந்தைகள் பார்வை இழப்பும், புத்திக் கூர்மை இல்லாமலும் குருடு மற்றும் செவிடாகவும் பிறக்கின்றன.

தற்போதைய நிலவரப்படி நம் இந்தியாவில் 15 கோடி மக்கள் அயோடின் சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் 6 கோடி பேர் முன் கழுத்துக் கழலை(Goiter) நோயாலும் 2 கோடி பேர் பார்வை இழப்பு மற்றும் கேளாமையாலும் 7 கோடி பேர் மூளை வளர்ச்சி குன்றிய நிலையிலும் உள்ளார்கள்.

அயோடின் சத்து காய்கறிகள், காளான் மற்றும் கடல் உணவு வகைகளிலிருந்து நமக்குக் கிடைத்தாலும் உப்பு மூலம் அயோடின் உட்கொள்ள வேண்டும் என்ற நடைமுறையை (WHO) உலக சுகாதார மையம் கொண்டு வந்தது.

இதன்படி தினந்தோறும் மனிதனுக்கு 15% கிராம் உப்பு தேவைப்படுகிறது. இதில் 15% PPM என்கிற அளவிற்கு அயோடின் இருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். எனவே “அயோடின் சத்து நம் குலவாழ்வின் வித்து” என்பதை உணர்ந்து அயோடின் கலந்த அயோடைஸ்டு உப்பைப் பயன்படுத்துவோம். ஆரோக்கியமான வாழ்வு வாழ்ந்திடுவோம்.

***- கோவை.பஷீர்***

# தேனீக்கள் (Honey Bee)

-அறிவியல் தொடர்-

***E. உஸ்மான் அலி***

## ஆண் தேனீ (Drone)

இவற்றை ஆண் ஈக்கள் என்பதை விடச் சோம்பேறி ஈக்கள் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். இவை பொதுவாக செயலற்ற நிலையில் பெரும்பகுதி நேரத்தைக் கழிக்கக் கூடியதாகும். ஒரு கூட்டில் இவற்றின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் அமைந்திருக்கும். இவை தேன் சேகரிக்க வெளியில் செல்வதுமில்லை. தங்கள் கூட்டிற்கு ஆபத்து வரும் போது அவற்றைக் காக்கும் பொருட்டு எதிரியை கடிக்கும் திறனையும் பெற்றிருக்கவில்லை. ஏனெனில் இவற்றிற்கு கடிக்கக் கூடிய கொடுக்கு அமைப்பு இல்லை.

நான் ஆண் என்று வீரவசனம் பேச இவற்றிற்கு கூட்டிற்குள் எந்தத் தகுதியும் இல்லை என்பதை இவை உணர்ந்து சமர்த்தாக நடந்து கொள்கின்றன. இவை தங்கள் உணவுத் தேவை மற்றும் பாதுகாப்புத் தேவைக்கு வேலைக்காரத் தேனீக்களைச் சார்ந்து வாழ்கின்றன. இவை செய்யக் கூடிய உருப்படியான காரியம் என்னவென்றால் புதியதாக பொறித்து வெளிவரும் இராணித் தேனீக்களுடன் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு உயிர் விடுவதுதான். இந்த ஒரு இனப்பெருக்கக் காரணத்திற்காகவே இவை மற்றவைகளினால் சகித்துக் கொள்ளப்படுகின்றன. இவை பறந்த வண்ணம் இராணித் தேனியுடன் இனப் பெருக்கத்தில் ஈடுபட்டவுடன் இவற்றின் சிறகுகள் உதிர்ந்து கீழே விழுந்து இறந்துவிடுகின்றன. மேலும் சில நேரங்களில் இவற்றின் சோம்பேறித் தனத்திற்கு பரிசாகக் கூட்டில் உணவு பற்றாக்குறை ஏற்படும் போது பலவந்தமாக, நிர்கதியாக கூட்டை விட்டு வெளியேற்றப்பட்டு பட்டினியால் சாகடிக்கப்படுகின்றன. மற்றவரை அண்டி வாழ்பவரின் நிலை அதோ கதிதான் என்பது மனித இனத்திற்கும் பொதுவானதுதானே.



## வேலைக்காரத் தேனீக்கள் (Workers Bee)

மலரின் மதுவை தேனீக்களினால் உறிஞ்சி உட்கொள்ளப்பட்டு பின்னர் அவற்றின் வயிற்றிலிருந்து வெளிவருவதுதான் இனிய நலன் பயக்கும் தேன் ஆகும். முட்டையிட்டு சந்ததிப் பெருக்கம் செய்ய இயலாத மலட்டுப் பெண் தேனீக்களே வேலைக்காரத் தேனீக்கள் ஆகும். இவைதான் அதிசய ஆற்றலும் தகவமைப்பும் பெற்று விளங்கக் கூடியவை. இந்த வேலைக்காரத் தேனீக்களால்தான் கூட்டில் இருக்கும் இராணித் தேனீ, லார்வாக்கள் மற்றும் ஆண் தேனீக்களுக்கு உணவு அளிக்கப் படுகின்றது. இவற்றின் உள்ளுறுப்புகளில் ஒன்றான மெழுகு சுரப்பியிலிருந்து (wax gland)சுரக்கும் மெழுகைக் கொண்டுதான் கூடுகள் கட்டப்படுகின்றன. மேலும் இவற்றின் வயிற்றில் அமைந்த தேன் பைகளினால் (honey sac) மலரின் குளுகோஸ் இரசாயண மாற்றம் செய்யப்பட்டு தேனாக மாற்றப்படுகின்றது. இதைத்தான் வல்ல நாயன் தன் தூய வசனத்தில் தெளிவுபடுத்தியுள்ளான். விளக்கம் தேவையே இல்லாத வார்த்தைகளினால் திருமறையின் பரிசுத்தத்திற்கு சான்று பகரும் வார்த்தைகள் இதோ!

***அதன் (தேனீக்களின்) வயிற்றிலிருந்து ஒரு பானம் வெளியேறுகின்றது. அதில் மனிதர்களுக்கு நோய் நிவாரணம் உள்ளது. சிந்திக்கிற மக்களுக்கு இதில் நிறைய அத்தாட்சிகள் இருக்கின்றன.***

***(அல்குர்அன் 16:69)***

மேலும் இவற்றின் பின்புறக் கால்களில் அமைந்த மகரந்தக் கூடை என்னும் உறுப்பின் மூலம் மகரந்தச் சேகரிப்பும் இவற்றைக் கொண்டு நடைபெறுகின்றன. கூட்டின் வெப்ப நிலையை குறைக்கவும் தேவையின் போது குளிர் காலங்களில் கூட்டில் வெப்ப நிலையை ஏற்படுத்துவதும், எதிரிகள் தங்கள் கூட்டைத் தாக்க வரும் போது தங்கள் கொடுக்கினால் எதிரியைக் கொட்டி பாதுகாக்கவும் செய்கின்றன. இவை ஒரு முறை எதிரியை கொட்டியவுடன் இறந்து விடுகின்றன. இவற்றின் கொடுக்கு அதனுடைய விஷப் பையுடன் இணைந்து இருப்பதனால் கொட்டும் போது அதன் கொடுக்கு எதிரியின் உடலில் குத்தப்பட்டு அங்கேயே தங்கிவிடுவதனால் அவற்றுடன் இணைக்கப்பட்ட விஷப் பையின் வாய் சிதைந்து விஷம் அவற்றின் உடலில் பரவி உயிரிழக்கக் காரணமாக அமைந்து விடுகின்றது. தங்கள் கூட்டைக் காக்கும் போராட்டத்தில் இவை உயிரைத் தியாகம் செய்கின்றன. கூட இருந்தே கொல்லும் நோய் என்றுச் சொல்வார்கள். இங்கே கூட இருந்தே கொல்லும் விஷம்! இதுதான் தேனீக்களின் நிலை.

## தேன் கூட்டின் அமைப்பு

ஆயிரம் தச்சர்கள் கூடி உருவாக்கும் மண்டபம் என்று தமிழில் சொல்லப்படும் உவமைக்கு உரியவை தேனீக்கள் கட்டும் கூடாகும். தேனின் கூடு வேலைக்காரத் தேனின் உள்ளுறுப்புகளில் ஒன்றான மெழுகு சுரப்பியிலிருந்து சுரக்கும் மெழுகைக் கொண்டு கட்டப்படுகின்றன. இதுவே மனிதர்களின் பல பயன்பாட்டிற்கு உதவும் தேன் மெழுகு ஆகும். இவற்றின் கூடு பொதுவாக மரங்கள், மலைக் குகை, மனிதர்கள் எளிதில் அடைய முடியாத கட்டிடத்தின் முடுக்கு, பொந்துகள் போன்றவற்றில் கட்டப்பட்டிருக்கும். இவற்றின் கூட்டு அறை மிக சரியாக அறுகோண வடிவத்தில் அமைந்துள்ளது. கலைப் பொருட்களை நாம் எப்படி நேர்தியாக செய்வோமோ அந்த அளவிற்கு மிக நேர்தியாகக் பார்க்க ரசனையை அளிக்கக் கூடிய முறையிலே கூட்டைக் கட்டுகின்றன. கணித ரீதியாக அறுகோண வடிவம் என்பது அதிக எடையைத் தாங்கும் அமைப்புடன் விளங்குகின்றன. பொறியியல் அறிந்த ஈக்கள் போலும்!

இராணித் தேனீயின் லார்வா அறை மட்டும் நிலக்கடலையின் வடிவிலும் மற்றவற்றைக் காட்டிலும் சற்றுப் பெரியதாயிருக்கும். கூட்டின் மேற்பகுதியில் தேனின் சேமிப்பு அறை அமைந்துள்ளது. இவற்றின் அறை சுவற்றின் தடிமன் ஒரு அங்குலத்தில் ஆயிரத்தில் இரண்டு பகுதி உடையதாயிருக்கும். இவை இந்த அளவிற்கு மெல்லியதாக இருப்பினும் அவை அதன் எடையைக் காட்டிலும் 25 மடங்கு எடையைக் தாங்கக்கூடிய திறன் உடையதாயிருக்கும். இவற்றின் கூடு முழுதும் இத்தகைய துளை அறைகளை கொண்டதாயிருக்கும். நாட்கள் கூடக் கூட இவற்றின் கூட்டின் அளவும் பெரியதாகிக் கொண்டே செல்கின்றது. ஒரு நல்ல ஆரோக்கியமான கூட்டில் 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் ஈக்கள் வரை இருக்கும். இத்தகைய பிரம்மாண்டமான

எண்ணிக்கையில் இருப்பினும் கூட இவற்றிற்கிடையே எந்த விதமான நிர்வாகக் கோளாறுகளோ அல்லது குளறுபடிகளோ வருவதில்லை. மனிதர்களோ ஒரு தலைமைக்கு கட்டுபட்டு நடக்கக் கூடிய தேனீக்களிடம் பாடம் படிக்க வேண்டிய நிலையில் தான் இருக்கின்றோம். என் கடமை பணி செய்து கிடப்பதே! என்பதே இவற்றின் தாரக மந்திரம் ஆகும். ஒரு நல்ல கூட்டின் சுற்றளவு 3 மீட்டர் வரை கூட இருக்கும். இவற்றின் கூடு அதிகமான ஈக்களின் எண்ணிக்கையினால் ஏற்படும் அதிக படியான எடையால் விழுந்து விடாமல் இருப்பதற்காக வேலைக்கார தேனீக்களால் மரங்களின் பிசினைக் கொண்டு அவற்றில் சில என்ஸைம்களைச் சேர்த்து புரொபோலிஸ் என்னும் பிசின் போன்ற பொருளைக் கொண்டு உறுதியாக ஒட்டப்படுகின்றது. மேலும் இவற்றைக் கொண்டு கூடுகளில் ஏற்படும் விரிசல் போன்ற பழுதுகளைச் சரி செய்யப்படுகின்றன.

## இனப்பெருக்கம்

லார்வாக்களுக்கு ஒரு நாளைக்கு 1200 முறைகளுக்கு மேல் உணவளிக்கப்படுகின்றது.

இராணித் தேனீயின் மூலம் அறைக் கூடுகளில் அறைக்கு ஒன்று வீதம் இடப்படும் முட்டைகள் மூன்று நாட்களுக்குப் பிறகு பொரிந்து லார்வாக்கள் வெளிவருகின்றன. இராணித் தேனீக்கென்று வித்தியாசமான வடிவில் நிலக்கடலை வடிவத்தில் கூடு கட்டப்படுகின்றன. லார்வா நிலையில் அவற்றிற்கு வேலைக்காரத் தேனீக்களினால் ஒருநாளைக்கு 1200 முறைக்கு மேல் உணவு அளிக்கப்படுகின்றது. தங்களது சுய நலத்திற்கல்லாமல் தங்கள் காலனியின் நலனையே கருத்தில் கொண்டு புதிய சந்ததிகளை உருவாக்க வெறித்தனமாக செயல்படும் இந்த செயல் உண்மையில் சிந்திக்கத் தக்க விஷயமாகும். முதல் இரண்டு நாட்களுக்கு வேலைக்கார லார்வாக்களுக்கு ராயல் ஜெல்லி என்னும் உயர் தர புரத உணவு அளிக்கப்படுகின்றது. இது வேலைக்காரத் தேனீக்களின் சுரப்பிகளிலிருந்து சுரக்கின்றது. அதன் பிறகு மகரந்தத் தூள் மற்றும் தேன் ஆகியவை உணவாக அளிக்கப் படுகின்றது. ஆனால் இராணித் தேனியின் லார்வாக்களுக்கு ராயல் ஜெல்லி மாத்திரமே உணவாக முழு வளர்ச்சி அடையும் வரை அளிக்கப்படுகின்றது. இத்தகைய வேற்றுமை லார்வா பருவத்திலிருந்தே நடைமுறைப்படுத்தப் படுகின்றன. இத்தகைய உயர் தர உணவு தொடர்ந்து கொடுக்கப்படுவதன் மூலம் இவை துரித வளர்ச்சியடைகின்றன. அதன் பிறகு லார்வா முழு வளர்ச்சி நிலையை அடைகின்றது. பின் அறை கூட்டின் மேல் பகுதி மெழுகினால் சீல் வைக்கப்பட்டு மூடப்படுகிறது. அதன் பிறகு கூட்டுப் புழு நிலையை அடைந்து பிறகு முழு வளர்ச்சி அடைந்த நிலையில் அறைக் கூட்டின் மேல் பகுதியை உடைத்து வெளி வருக்கின்றன.

இராணித் தேனீ முழு வளர்ச்சியடைந்து வெளிவர 16 நாட்களும் வேலைக்காரத் தேனீக்களுக்கு 21 நாட்களும் ஆண் தேனீக்களுக்கு 24 நாட்களும் ஆகின்றன. பொதுவாக எல்லா நாட்களிலும் சில நூறு அறைகளிலாவது லார்வா நிலையில் உள்ளவைகளுக்கு உணவு அளிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்.

## புதிய வரவுகள்

தேனீக்கள் வெளி வந்தவுடன் புதிய தேனீக்கள் மூன்று வாரங்கள் வரை கூட்டிற்குள்ளேயே வேலையில் அமர்த்தப்படுகின்றன. கூடுகளைப் பராமரிக்கவும், பழைய லார்வா அறைகளைத் தூய்மைப்படுத்தி அடுத்து முட்டையிட ஏதுவாக்கி வைக்கவும், லார்வாக்களுக்கு உணவளித்து பராமரிக்கவும், வேலைக்காரத் தேனீக்களினால் கொண்டுவரப்படும் தேனை இவை தங்கள் வாயில் பெற்று அதை அதற்கென்று இருக்கும் பிரத்யேகமான அறையில் நிரம்பியதன் பின்னர் அதில் காற்று புகா வண்ணம் இறுக்கமாக (airtight) சீல் வைக்கின்றன. மேலும் இவை கூட்டின் வெப்பம் மிகைத்து விடும் போது நீரை விட்டு சிறகை தொடர்ந்து அசைப்பதன் மூலம் காற்றோட்டத்தை ஏற்படுத்தி வெப்ப நிலையை குறைக்கின்றன. இவை நிமிடத்திற்கு 11,400 முறை சிறகடிக்கின்றன. இதனால்தான் கூட்டில் ஈக்களின் ரீங்காரத்தைக் கேட்க இயலுகின்றது. கடுமையான குளிர் காலங்களில் இவை ஒன்றுடன் இறுக்கமாக இணைந்து கூட்டில் இருக்கும் லார்வாக்கள் முறையாக வளர்ச்சியடைய வகை செய்கின்றன. இறுதியாக மூன்று வாரங்களுக்குப் பிறகு இவை வெளியே சென்று தேனைச் சேகரிக்க அனுப்பப்படுகின்றன.

## தேன் சேகரிப்பு

தேனீக்கள் ஏறக்குறைய ஒரு லட்சம் கிலோ மீட்டர் வரைப் பயணிக்கும் திறன் கொண்டதாகும். தேனீக்கள் ஏன் தேனை சேமித்து வைக்கின்றன? என்ற கேள்விக்கு விடை தேடிச் சென்றால் நமக்கு கிடைக்கும் பதில் மலர்கள் பூக்காத உணவு உற்பத்திக்கு வழியே இல்லாத குளிர் காலத்திற்காக இவைகளால் முன் கூட்டியே சேகரிக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைதான் தேன் சேகரிப்பு ஆகும். தேனீக்கள் மணிக்கு 40 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும் ஆற்றல் பெற்றதாகும். ஒரு வருடத்தில் இவைகளினால் கூட்டிற்கு 450 கிலோ எடையுடைய மலரின் குளூகோஸ், மரங்களிலிருந்து கொண்டு வரப்படும் புரொபோலிஸ் என்னும் பிசின், நீர் மற்றும் மகரந்தம் கொண்டு வரப்படுகின்றன என்று சொன்னால் ஒரு கூட்டில் வேலைக்காரத் தேனீக்களின் பங்களிப்பு என்னவென்பதை நம்மால் உணர முடிகின்றது.

சில வகைத் தேனீக்கள் தங்கள் உணவிற்காக செல்லும் தொலைவை நாம் அறிந்தால் நம்புவதற்குக் கடினமாக இருக்கும். ஏன் என்று சொன்னால் தேனீக்கள் சற்றேறக் குறைய ஒரு லட்சம் கி.மீ வரை பயணித்து இரண்டு மில்லியன் பூக்களிலிருந்து குளூகோஸை எடுத்துப் பிறகு சரியாக தங்கள் கூடு திரும்புகின்றன என்று சொன்னால்

இறைவா! உன்னுடைய அற்புதம் தான் என்ன. இவ்வளவு தொலைவான தூரங்களிலிருந்து மிகச் சரியாக கூடு திரும்பும் இந்த ஆற்றல் எங்ஙனம் இவற்றிற்கு சாத்தியம் ஆயிற்று? இதோ நம் இறைமறை பதில் அளிக்கின்றது..

***மலைகளிலும், மரங்களிலும், மனிதர்கள் கட்டுபவற்றிலும் நீ கூடுகளை அமைத்துக் கொள்! பின்னர் ஒவ்வொரு கனி வர்க்கத்திலும் சாப்பிடு! உன் இறைவனின் பாதையில் எளிதாகச் செல் என்று உமது இறைவன் தேனீக்களுக்கு அறிவித்தான். அதன் வயிறுகளிலிருந்த மாறுபட்ட நிறங்களையுடைய பானம் வெளிப்படுகிறது. அதில் மனிதர்களுக்கு நோய் நிவாரணம் உள்ளது. சிந்திக்கிற சமுதாயத்திற்கு இதில் சான்று உள்ளது. (அல்குர்ஆன் - 16:68,69)***

**- தொடரும் (இன்ஷாஅல்லாஹ்)**

# குறுக்கெழுத்துப் போட்டி - 2:4

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | 2 |
| | | | | 3 | | | |
| 4 | | 5 | | | | | |
| | ■ | | | 6 | 7 | 8 | |
| | ■ | | 9 | | | | |
| | ■ | | ■ | | | | 10 |
| 11 | | | | | ■ | ■ | |
| | 12 | | | | | | 13 |

## விதிமுறைகள்

**1.** விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர்

**Mr. K.L.M. Ibrahim(Madani), Tamil Division,**
**P.O.Box-32628,Jeddah-21438**

அல்லது **suvanam@gmail.com** என்கிற முகவரிக்கு **முஹர்ரம்** மாதம் **30**-ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

**2.** விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் மற்றும் கீழிலிருந்து மேல் ஆகியவைகளை குறிப்பிட்டு எழுத வேண்டும்.

**3.** நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

**4.** ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

**5.** பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

**6.** ஆசிரியர் முடிவே இறுதியானது.

## குறுக்கெழுத்துப் போட்டி – 2:2 க்கான பரிசு பெறுபவர் விபரம்

குறுக்கெழுத்துப் போட்டி - 2:2 க்கான சரியான பதில்களை பலரும் எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பரிசு பெறுபவர்.

**G. சபீர் அஹமது**

குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.

**இடமிருந்து வலம்**

1. இறைவனின் பெயரைக் கொண்டு ஆரம்பிக்கும் அத்தியாயம் (6)
4. வைகறையைக் குறிக்கும் அத்தியாயம் (6)
9. சிலந்தியின் பெயரைக் குறிப்பிடும் அத்தியாயம் (5)
11. 58ஆவது அத்தியாயத்தின் பெயர் (4)

**வலமிருந்து இடம்**

3. உதய தாரகையைக் குறிக்கும் அத்தியாயம் (5)
10. திருக்குர்ஆனின் 36 அத்தியாயம் (3)
12. திருக்குர்ஆனின் கடைசி அத்தியாயம் (2)
13. இம்ரானின் குடும்பத்தைக் குறிக்கும் அத்தியாயம் (6)

**மேலிருந்து கீழ்**

2. இரும்பைக் குறிக்கும் அத்தியாயம் (5)
4. நட்சத்திரத்தைக் குறிக்கும் அத்தியாயம் (5)
5. "ஆரம்பமாக படைப்பவன்" என்ற பெயரைக் குறிக்கும் அத்தியாயத்தின் பெயர் (4)
6. பெண்களைக் குறிக்கும் அத்தியாயம் (4)

**கீழிலிருந்து மேல்**

7. 31-வது அத்தியாயத்தின் பெயர் (4)
8. அத்திப் பழத்தைக் குறிக்கும் அத்தியாயம் (4)
9. மக்கா வெற்றியைக் குறிக்கும் அத்தியாயம் (5)
13. திருக்குர்ஆனின் 100-வது அத்தியாயத்தின் பெயர் (4)

## வாசகர்கள்! – கருத்து!

**அன்பிற்கினிய "சுவனப்பாதை" வாசகர்களே!!!**
**சுவனப்பாதை குறித்த உங்கள் மேலான கருத்துக்கள் எண்ணங்கள், என எதுவாகினும் எங்களுக்கு எழுத்துக்கள் மூலம் தெரிவிக்கலாம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி – 2: 2 க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | யி | 2 ஷா | ர் | ஜா | ■ | ■ | 3 கௌ |
| 4 ஷ | ■ | 5 ஜ | ன | வ | ரி | ■ | த |
| ரா | த் | மௌ | ல் | கு | க் | ல | 6 ம |
| க் | ரா | த் | தா | க் | 7 பர் | ■ | பு |
| 8 கா | ரை | ஸா | ன் | மா | ஸ் | 9 உ | த் |
| ர் | ஹு | ம் | ■ | ■ | ர | ரி | த |
| கி | பூ | 10 ஹ | 11 ம | தீ | னா | வி | ர் |
| ல் | 12 அ | னி | கு | ங் | 13 ப | 14 கா | ■ |